1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: இந்தத் திட்டம் என்ன மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM: I have no other details.

பாலவாக்கம் ஏரியைச் செப்பனிடுதல்

* 371 வினு—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பாலவாக்கம் பொதுப் பணித்துறை ஏரியை SMIP திட்டத்தின் கீழ் சிறப்பாகச் செப்பனிடும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இவ்வேலையை துவக்கி விரைவாக முடிக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: இந்த எஸ்.எம்.ஐ.பி. திட்டத்தின் மூலம் நாட்டில் அரசு சார்பில் மிக சிறப்பாக மராமத்து வேலைகள் நடைபெற்றன. அண்மையில் எஸ்.எம்.ஐ.பி. திட்டத்தின் கீழ் பல வேலைகள் எடுத்துக்கொள்ளாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பழைய நிலைமையில் எல்லா திட்டங்களும் அனுமதிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் இந்த வேலையை மட்டும் சொன்னேன். இந்த வேலை சீக்கிரம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும்.

Data Processing Unit

* 372. *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to install a data processing unit in the Directorate of Employment and Training in this State; and

(*b*) if so, the functions of the unit?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். புள்ளிவிவரத் தகவல் தொகுப்புப் பிரிவு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது.

(இ) வேலைவாய்ப்பு-பயிற்சித்துறை இயக்குநர் அலுவலகத்திற்குப் பெருமளவில் வந்து குவிகின்ற பல்துறை வேலைவாய்ப்புகள் குறித்த தகவல்கள் தொடர்பான புள்ளிவிவரங்களைத் திறம்பட இயந்திர உதவியால் அட்டவணைப்படுத்தும் ஓர் ஏற்பாட்டினை இப்பிரிவு செயல்படுத்துகிறது. இத்தகைய புள்ளிவிவரத் தகவல்கள் விரைந்து முறைப்படுத்தப்பட்டுத் தொகுக்கப்படுகின்றன. ஆட்கள் இவற்றை அட்டவணைப்படுத்துவதற்காகும் காலதாமதம் இதனால் தவிர்க்கப்படுகிறது. மேலும் இதனால் வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பணிகள் மேம்படுகின்றன.

கண்ணிழந்தோருக்குக் கடன் வசதிகள்

* 373 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கண்ணிழந்தோருக்கு வர்த்தக வங்கிகள் கடன் தரவேண்டுமென்று அரசு அவைகளைக் கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : இப்படி கண் இழந்தோர்களில் தொழில் கல்வி படித்தவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தனியார் தொழில்சாலையில் அரசு மூலம் வேலை தேடிக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அப்படி வேலை கிடைக்காமல் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா? கண் இழந்தோர்களில் தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை தரக்கூடிய முறையில் ஏதாவது தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசாங்கமே முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையில் நடைபெற்ற மகாநாட்டில் 'ஹாண்டிகாப்டு பீப்பிளுக்கு' இதுபோன்ற தொழிற்சாலை ஏற்படுத்தலாமா என்று ஒரு ஆலோசனையை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது